Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 28 | உள்ளூர் - 28.01.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 54 | * Issue 28 | வெளியூர் - 29.01.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

மாமியாருக்கு அதிர்ஷ்டத்தை கொடுக்கும் மருமகன்கள்...?

புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!

அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடை விதிகளில் மாற்றம்?

வங்கிகளில் கடன் வாங்கியவர்களுக்கு ஜாக்பாட்!!

# மலேஷியா செல்கிறார் மோடி; தமிழர்களுடன் பேச ஏற்பாடு!

மலேஷியா, ஜன. 28–

பிரதமர் மோடி , வரும் பிப்ரவரி ஏழு ஆம் தேதி மலேஷியா செல்லும் நிலையில் , அங்கு தமிழர்கள் பங்கேற்கும் பிரமாண்டமான கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. எந்த மாநிலத்தில் தேர்தல் நடந்தாலும் , அம்மாநில மக்களை ஈர்க்கும் வகையிலான முயற்சிகளை, பிரதமர் மோடி மேற்கொள்வார் . கடந்த ஆண்டு நவம்பரில் , பீஹாரில் சட்டசபை தேர்தல் நடந்தது . அதற்கு சில மாதங்களுக்கு முன் , பீஹார் வம்சாவளியினர் அதிகம் வசிக்கும் , டிரினிடாட் அண்டு டபேகோ நாட்டுக்கு பிரதமர் சென்றார் . இந்திய வம்சாளியை சேர்ந்த அந்நாட்டு பிரதமரை , ' பீஹா ரின் மகள்' என அழைத்தார்



இது பீஹார் தேர்தலில் பேசுபொருளானது . வரும் ஏப்ரலில் , தமிழக சட்டசபை தேர்தல் நடக்கவுள்ள நிலையில் , பிரதமர் மோடி , வரும் பிப்ரவரி ஏழு ஆம் தேதி மலேஷியா செல்கிறார்

மலேஷிய தலைநகர் கோலாலம்பூரில் , இந்திய சமூகத்தினர் பங்கேற்கும் பிரமாண்டமான கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது . இதில் , அங்குள்ள தமிழர்களை அதிக அளவில் பங்கேற்கச் செய்ய , பா . ஜ , ஆதரவாளர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இந்த ஏற்பாடுகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை , பா . ஜ , மகளிரணி தேசிய தலைவர் வானதியிடம் , பிரதமர் மோடி ஒப்படைத்துள்ளார் . இதற்காக அவர் நேற்று காலை , கோலாலம்பூர் சென்றார். பிரதமர் மோடியின் மலேஷிய பயணத்தில் , அங்குள்ள தமிழர்களுடன் கலந்துரையாட இருக்கிறார் . அங்குள்ள மாரியம்மன் , முருகன் கோவில்களில் அவர் வழிபாடு நடத்த இருப்பதாகவும் , பா . ஜ , நிர்வாகி ஒருவர் தெரிவித்தார் . மலேஷியா செல்வதை முன்னிட்டு , கடந்த இருபத்து ஐந்தாம் தேதி , ' மன் கி பாத்' நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி , ' மலேஷியாவில் , ஐநூறுக்கும் அதிகமான தமிழ் பள்ளிகள் உள்ளன . இவற்றில் தமிழ் கற்பிக்கப்படு வதோடு , பிற விஷயங்க ளையும் கூட தமிழிலேயே கற்பிக்கின்றனர்' என்றார்.

# விமான விபத்தில் துணை முதல்வர் அஜித் பவார் காலமானார்..!

மும்பை, ஜன. 28–

மராட்டிய மாநிலம் புனே மாவட்டத்தில் நடைபெற இருந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக, அந்த மாநிலத்தின் துணை முதல்–மந்திரி அஜித் பவார் சிறிய ரக தனி விமானத்தில் சென்று கொண்டிருந்தார். இந்நிலையில் பாராமதி பகுதி அருகே தரையிறங்க முயன்றபோது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு எதிர்பாராத விதமாக விமானம் விழுந்து நொறுங்கி விபத்திற்குள்ளானது.

விபத்தில் சிக்கிய விமானம் உடனடியாக தீப்பற்றி எரியத் தொடங்கியது. இன்று காலை 8.45 மணியளவில் நடந்த



இந்த கோர விபத்தில் அஜித் பவார் உள்பட, விமானத்தில் பயணித்த அவரது பாதுகாவலர்கள் 2 பேர் மற்றும் விமானிகள் 2 பேர் என மொத்தம் 5 பேர் உயிரிழந்ததாக விமானத்துறை இயக்ககம் அறிவித்துள்ளது.

நாட்டின் மூத்த அரசியல் தலைவர் சரத் பவாரின் அண்ணன் அனந்த்ராவ் பவாரின் மகனான அஜித் பவார்(வயத் 67), மராட்டிய துணை முதல்–மந்திரியாக 6 முறை பதவி வகித்தவர் ஆவார். மாநிலத்தின் நிதித் துறை, மின்சாரம் உள்ளிட்ட முக்கிய துறைகளின் அமைச்சராகவும் அஜித் பவார் இருந்துள்ளார்.

சரத் பவாரின் அரசியல் வாரிசு யார் என்பதில் ஏற்பட்ட மோதலால் அஜித் பவார் தனித்து செயல்பட்டார். அவரது பிரிவையே உண்மையான தேசியவாத காங்கிரஸ் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. மராட்டியத்தில் பா.ஜ.க. கூட்டணி அரசில் 3–வது பெரிய கட்சியாக அஜித் பவாரின் கட்சி உள்ளது. அஜித் பவாரின் மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.


# சட்டசபை தேர்தல் பிரசாரத்திற்கு நாள் குறித்த திமுக!

சென்னை , ஜன. 28–

திமுகவின் சட்டசபை தேர்தல் பிரசாரம் பிப் . ஒன்றாம் தேதி முதல் தொடங்க உள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:–

ஸ்டாலின் தலைமையில் இரண்டாயிரத்து இருபத்து ஆறாம் ஆண்டு ஜனவரி இருபது ஆம் தேதி நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் , தமிழ்நாடு தலைகுனியாது என்ற பிரசாரம் பிப்ரவரி மாதம் தொடங்கப்பட உள்ளது . பிரசாரத்தின் கீழ் ஸ்டாலினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது நட்சத்திரப் பேச்சாளர்கள் , தமிழகத்திலுள்ள இருநூற்று முப்பத்து நான்கு சட்டசபை தொகுதிகளிலும் , பிப்ரவரி மாதம் முழுவதும் தீவிரமான பிரசார பயணத்தை மேற்கொள்ள இருக்கிறார்கள் . இந்த பிரசாரத்தின் போது , ஒவ்வொரு தொகுதியிலும் , ஒரு பொதுக் கூட்டம் நடத்திட வேண்டும் . மேலும் , ஒவ்வொரு தொகுதியில் உள்ள முக்கிய பிரமுகர்கள் , இளைஞர்கள் , மாணவர்கள் , தன்னார்வ அமைப்புகள் , தொழிற்சங்கங்கள் , தொழில் முனைவோர் , கல்வியாளர்கள் உள்ளிட்டோரை ஒரே இடத்தில் அழைத்து , மண்டலப் பொறுப்பாளர்கள் , மாவட்டச் செயலாளர்கள் , பொறுப்பாளர்கள் மற்றும் நட்சத்திரப் பேச்சாளர்கள் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும் , கலந்து கொள்வோரின் எதிர்பார்ப்புகள் , கோரிக்கைகள்



குறித்தும் கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டும் . தமிழ்நாடு தலைகுனியாது பிரசாரத்தை வெற்றியடையச் செய்திடும் வகையில் பிரசாரம் குறித்து தக்க விளம்பரங்களைச் செய்திடவும் , தொகுதிகளில் தேவையான ஏற்பாடுகளைச் செய்திடவும் மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் , பொறுப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்


இவ்வாறு அறிக்கையில் துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

# குட்நியூஸ்..! ஏடிஎம்-களில் இனி 10, 20, 50 ரூபாய் நோட்டுகள்.! மத்திய அரசு முக்கிய முடிவு..!

டெல்லி, ஜன. 28–

இன்று யுபிஐ பயன்பாடு வேகமாக அதிகரித்து வந்தாலும், சில்லறைப் பணப் பற்றாக்குறைப் பிரச்சனை இன்னும் நீடிக்கிறது. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில், இந்திய அரசு சிறிய மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளின் இருப்பை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது

தங்களின் அன்றாடப் பணப் பரிவர்த்தனைகளுக்கு ரூ.10, ரூ.20 மற்றும் ரூ.50 நோட்டுகளை நம்பியிருக்கும் மக்களுக்கு, சிறிய மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்வதே அரசாங்கத்தின் நோக்கம். இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் அரசாங்கம் முன்னோடித் திட்டங்களையும் தொடங்கியுள்ளது. மும்பையில் அத்தகைய ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு சிறிய மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளின் இருப்பை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**புதிய ஏடிஎம் இயந்திரங்கள் எங்கு நிறுவப்படும்?**

மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், உள்ளூர் சந்தைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அலுவலகங்கள் போன்ற மக்கள் அதிகம் கூடும், பணத்தின் தேவை அதிகமாக உள்ள இடங்களில் இந்த புதிய ஏடிஎம்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த புதிய ஏடிஎம்கள் ரூ.100 மற்றும் ரூ.500 நோட்டுகளுடன், சிறிய ரூ.10, ரூ.20 மற்றும் ரூ.50 நோட்டுகளையும் வழங்கும்.

**பெரிய நோட்டுகளைச் சிறிய நோட்டுகளாக மாற்றும் வசதி:**

மக்கள் தங்கள் பெரிய நோட்டுகளைச் சிறிய நோட்டுகளாக எளிதாக மாற்றிக்கொள்ளும் வகையில் இயந்திரங்களை அமைக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. யுபிஐ பயன்பாடு வளர்ந்து வரும் இந்தக் காலத்திலும், சிறு கடைக்காரர்கள், பயணிகள், தெருவோர வியாபாரிகள், தினக்கூலித் தொழிலாளர்கள் உட்பட பலரும் அன்றாடப் பரிவர்த்தனைகளுக்குப் பணத்தையே பயன்படுத்தி வருகின்றனர். தற்போது, சிறிய மதிப்புள்ள ரூபாய் நோட்டுகளுக்கான ஏடிஎம் இயந்திரங்கள் மும்பையில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது வெற்றிகரமாக அமைந்து, ஒப்புதல் அளிக்கப்பட்டால், நாடு முழுவதும் செயல்படுத்தப்படும்.

## 'பாய்ச்சலில் இந்திய பொருளாதாரம்'

# பார்லியில் ஜனாதிபதி உரை பட்ஜெட் முதல் கட்ட அமர்வு பிப்.13 வரை

## இரண்டாம் கட்டம் மார்ச் 9– ஏப்.2 வரை

புதுடெல்லி, ஜன . 28–

பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாள் ஜனாதிபதி திரவுபதி முர்மு உரையுடன் தொடங்கி யது. இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றினார்.



மத்திய அரசின் கடந்த கால சாதனைகளை விளக்கி ஜனாதிபதி திரவுபதி முர்மு உரை யாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

* கடந்தாண்டில் 150 மில்லியன் டன் அரிசி உற்பத்தி செய்து உலகிலேயே முதல் இடத்தை இந்தியா பிடித்து சாதனை படைத்துள்ளது.

* உலகிலேயே மிகப்பெரிய மெட்ரோ நெட்வொர்க் கொண்ட நாடாக இந்தியா திகழ்ந்து வருகிறது.

* தமிழ்நாட்டில் பாம்பன் பாலம் செயல்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

* விண்வெளி சுற்றுலா திட்டத்தை செயல்படுத்த இந்தியாவுக்கு வெகுதூரம் இல்லை.

* கடந்த 2025–ம் ஆண்டில் மட்டும் 2 கோடிக்கும் அதிகமான இருசக்கர வாகன பதிவு செய்யப்பட்டுள்ளது.

* உலகிலேயே அதிவேகத்தில் வளரும் பெரிய பொருளாதாரமாக இந்தியா விளங்குகிறது.

* உலகம் முழுவதும் பொருளாதாரத்தில் மந்தநிலை இருந்தாலும் இந்தியாவின் பொருளாதாரம் வலுவாக உள்ளது.

* உலகில் 3–வது பெரிய பொருளாதார நாடாக இந்திய வளர்ச்சி அடைந்துள்ளது.

* கடந்தாண்டில் மட்டும் 350 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தி செய்து இந்தியா சாதனை படைத்துள்ளது.

* சூரிய மின் திட்டத்திற்கான அரசின் நடவடிக்கைகள் காரணமாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் கணிசமான வளர்ச்சியை கண்டுள்ளோம்.

* AI துறையில் முதலீடு அதிகரித்துள்ளது. செமி கண்டக்டர் சிப் உற்பத்தியில் உலகிற்கே முன்மாதிரியாக இந்தியா உள்ளது.

* நாட்டின் பின்தங்கிய மாநிலங்களில் உள்ள மக்களையும் முன்னேற்றும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

* ரெயில் சேவையால் இணைக்கப்பட்ட நிலையில் வடகிழக்கு மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனைகள் கட்டப்பட்டு வருகின்றன.

* அசாமில் உற்பத்தி செய்யப்படும் செமி கண்டெ க்டர் சிப்கள் விரைவில் பயன்பாட்டுக்கு வரும்.

* மீன் வளத்தை பெருக்குவதில் உலகிலேயே இந்தியா 2–வது இடத்தில் உள்ளது.

* உஜ்வாலா திட்டத்தின் மூலம் இதுவரை 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கேஸ் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

* எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் இந்தியா புதிய சாதனை படைத்துள்ளது.

* நாட்டில் கிட்டத்தட்ட 95 கோடி குடிமக்களுக்கு சமூக பாதுகாப்பு சலுகைகள் இப்போது கிடைக்கிறது.

* நாட்டில் சமூக நீதியை நிலைநாட்ட அரசு உறுதி பூண்டுள்ளது.

* வளர்ச்சி ஒன்றே தாரக மந்திரம் என மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

**பிப்ரவரி 1ல் பட்ஜெட்**

பார்லிமென்ட் பட்ஜெட் கூட்டத்தொடர் முதற்கட்ட அமர்வு, பிப்., 13 வரை நடக்கவுள்ள நிலையில், இரண்டாம் கட்ட அமர்வு, மார்ச் 9ல் துவங்கி, ஏப்., 2 வரை நடக்கிறது. வரும் 2026 – 27ம் நிதியாண்டு க்கான மத்திய பட்ஜெ ட்டை, பா.ஜ., மூத்த தலை வரும், மத்திய நிதி அமைச்சருமான நிர்மலா சீதாராமன், பிப்., 1ல் தாக்கல் செய்கிறார்.

# தமிழக மணல் குவாரி விதிகளில் மாற்றம்: விண்ணப்பக் கட்டணம், புதிய கட்டுப்பாடுகள் ?

சென்னை, ஜன. 28–

தமிழகத்தில் அரசுத் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்கள் மற்றும் குளங்களில் இருந்து மணல் மற்றும் இதர கனிமங்களை எடுப்பதற்கான விதிமுறைகளில் மாநில அரசு அதிரடி மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. இதற்காக 'தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள், 1959–ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கனிமங்களை எடுக்க விண்ணப்பிப்பதற்கான கட்டணம் தற்போது ரூ.1,500–லிருந்து ரூ.5,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



புதிய விதிகளின்படி, விண்ணப்பதாரர் விண்ணப்பக் கட்டணத்துடன் சேர்த்து திரும்பப் பெறத்தக்க 'பாதுகாப்பு வைப்புத்தொகையை' செலுத்த வேண்டும். இது எடுக்க அனுமதி கோரும் கனிமத்தின் அளவிற்கான அரசு உரிமைத் தொகையைப்போல (Sei–gniorage Fee) 2 மடங்கு இருக்கும். அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதல் கனிமங்களை எடுப்பது அல்லது நிபந்தனைகளை மீறுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால், மாவட்ட ஆட்சியர் உரிய விசாரணைக்குப் பிறகு அனுமதியை ரத்து செய்யலாம்.

விதிமீறல் கண்டறியப்பட்டால், கூடுதலாக எடுக்கப்பட்ட கனிமத்தின் மதிப்பு மற்றும் அதற்கான அரசு உரிமைத் தொகை ஆகியவை சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து வசூலிக்கப்படும். கனிமங்களை எடுப்பதால் குளங்களுக்கு சேதம் ஏற்பட்டால், அதனை சீரமைப்பதற்கான செலவு பாதுகாப்பு வைப்புத்தொகையிலிருந்து கழிக்கப்படும். ஒருவேளை சேதத்தின் மதிப்பு வைப்புத்தொகையை விட அதிகமாக இருந்தால், அது 1800–ஆம் ஆண்டின் வருவாய் மீட்புச் சட்டத்தின் (Revenue Recovery Act) கீழ் வசூலிக்கப்படும். இதற்கு முன்னால், விதிமீறல்கள் நடந்தால் அனுமதி ரத்து செய்யப்பட்டு, சேதத்தின் மதிப்பிற்கு ஏற்ப இழப்பீடு வசூலிக்கப்பட்டது. ஆனால் தற்போது வைப்புத்தொகை முறை மூலம் இது இன்னும் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி, அனுமதி காலம் முடிந்தவுடன் அல்லது அனுமதிக்கப்பட்ட அளவு கனிமங்களை எடுத்து முடித்தவுடன், அதிகாரிகள் அந்த இடத்தை ஆய்வு செய்வார்கள். நிபந்தனைகள் அனைத்தும் சரியாகப் பின்பற்றப்பட்டிருப்பதை உறுதி செய்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர் எழுத்துப்பூர்வமான உத்தரவின் மூலம் பாதுகாப்பு வைப்புத்தொகையை மீண்டும் விண்ணப்பதாரருக்கே திருப்பி வழங்குவார்.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 28.01.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 14-ம் தேதி

# மீண்டும் நிபா வைரஸ் அச்சம்; கோவிட் போன்ற பரிசோதனைகள் தொடக்கம்..!




இந்தியாவில் நிபா வைரஸ் பரவல் ஒருவித அச்ச அலையை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்த அறிக்கை வெளியான பிறகு, ஆசியாவில் உள்ள பல நாடுகள் விமான நிலையங்களில் சுகாதாரப் பரிசோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. தாய்லாந்து, நேபாளம் மற்றும் தைவான் போன்ற நாடுகள், பயணிகளைக் கண்காணிப்பது மற்றும் தீவிரக் கண்காணிப்பு உள்ளிட்ட கோவிட் கால பாணிப் பரிசோதனைகளை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளன.

கோவிட் காலத்தில் எவ்வாறு பரிசோதனைகள் செய்யப்பட்டதோ, அதேபோன்று தற்போதும் மீண்டும் அத்தகைய பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. சந்திர புத்தாண்டு பயணக் காலம் நெருங்கி வருவதால், மில்லியன் கணக்கான மக்கள் பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்தத் தொற்றுநோய் சீனாவிலும் கவனத்தை ஈர்த்துள்ளது.

**இந்தியாவில் நிபா தொற்று பரவி வருகிறதா?**

தற்போதைய தொற்று, மேற்கு வங்கத்தில் ஒரு நபர் அறியப்படாத நோயால் இறந்த பிறகு, ஐந்து சுகாதாரப் பணியாளர்களிடம் முதலில் கண்டறியப்பட்டது. மேலும் 100 முதல் 200 பேர் வரை பாதிக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்று எய்ம்ஸ் பிலாஸ்பூர் தலைவர் பேராசிரியர் டாக்டர் நரேந்திர குமார் அரோரா தெரிவித்தார்.

**நிபா வைரஸ் என்றால் என்ன?**

நிபா வைரஸ் ஒரு அரிய, ஆனால் அதிக அளவில் பரவக்கூடிய ஒரு விலங்கு வழி வைரஸ் ஆகும். இது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கும், மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கும் பரவக்கூடியது. இது முதன்முதலில் 1998–99 ஆம் ஆண்டில் மலேசியாவில் அடையாளம் காணப்பட்டது மற்றும் சுங்கை நிபா என்ற கிராமத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது. அன்று முதல், இந்தத் தொற்று முக்கியமாக தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில், குறிப்பாக வங்கதேசம் மற்றும் இந்தியாவில் பரவியுள்ளது. கேரளாவில் மீண்டும் மீண்டும் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இந்த வைரஸின் இயற்கையான விருந்தோம்பி பழ வௌவால்கள் (டெரோபஸ் இனங்கள்) ஆகும். இவை நோய்வாய்ப்படாமல் வைரஸைக் கொண்டு செல்கின்றன, மேலும் அவற்றின் உமிழ்நீர், சிறுநீர் மற்றும் மலம் வழியாக வைரஸைப் பரப்புகின்றன.

**நிபா வைரஸ் எப்படிப் பரவுகிறது?**

வௌவால்களால் அசுத்தமான உணவுகளான பாதியாகச் சாப்பிடப்பட்ட பழங்கள் அல்லது பதப்படுத்தப்படாத பேரீச்சம்பழச் சாறு போன்றவற்றை உட்கொள்வதன் மூலமாகவோ அல்லது பன்றிகள் போன்ற பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் நேரடித் தொடர்பு கொள்வதன் மூலமாகவோ இந்த வைரஸ் மனிதர்களுக்குப் பரவுகிறது. பாதிக்கப்பட்ட ஒருவரின் உடல் திரவங்கள் அல்லது சுவாசத் துளிகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதன் மூலம் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவுகிறது. இதனால், ஒரு தொற்று பரவலின் போது குடும்ப உறுப்பினர்களும் சுகாதாரப் பணியாளர்களும் குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவர்க ளாக உள்ளனர். இதன் காரணமாக, கடுமையான தொற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பின்பற்றப்படாவிட்டால், மருத்துவமனைகள் பெரும்பாலும் பரவலின் முக்கிய மையங்களாக மாறுகின்றன.

**அறிகுறிகள் என்ன?**

தொற்று ஏற்பட்ட 5–14 நாட்களுக்குப் பிறகு பொதுவாக அறிகுறிகள் தோன்றும். ஆரம்ப அறிகுறிகளில் காய்ச்சல், தலைவலி, தசை வலி, வாந்தி மற்றும் தொண்டை வலி ஆகியவை அடங்கும். மிகவும் கடுமையான அறிகுறிகளில் தலைசுற்றல், மயக்கம், குழப்பம், வலிப்பு, மூளை அழற்சி அல்லது மூளை வீக்கம் மற்றும் கோமா ஆகியவை அடங்கும். சில நோயாளிகளின் நிலை 24–48 மணி நேரத்திற்குள் வேகமாக மோசமடைகிறது.

**இது எவ்வளவு ஆபத்தானது?**

இறப்பு விகிதம் 40–75% ஆகும் (இது தொற்று பரவலின் அளவைப் பொறுத்து மாறுபடும்). உயிர் பிழைத்தவர்களுக்கு நீண்ட கால நரம்பியல் பிரச்சனைகள் ஏற்படலாம். சில சமயங்களில் மாதங்கள் அல்லது வருடங்களுக்குப் பிறகு நோய் மீண்டும் வருவதைக் காணலாம்.

**இதற்கு ஏதேனும் சிகிச்சை உள்ளதா?**

இல்லை, நிபா வைரஸுக்கு தற்போது எந்த சிகிச்சையும் இல்லை. உடலிலிருந்து வைரஸை அகற்றக்கூடிய குறிப்பிட்ட வைரஸ் எதிர்ப்பு மருந்தோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசியோ இல்லை. சிகிச்சை என்பது ஆதரவு சிகிச்சையுடன் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, மருத்துவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவு பராமரிப்பு, சுவாசம் பாதிக்கப்பட்டால் வென்டிலேட்டர் ஆதரவு, மூளை வீக்கத்திற்கான சிகிச்சை மற்றும் உன்னிப்பான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் அறிகுறிகளையும் சிக்கல்களையும் கையாளுகிறார்கள்.

இந்த வைரஸுக்கு தற்போது எந்த தடுப்பூசியும் இல்லை. மேலும் ஒருவருக்கு நிபா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டவுடன் மோனோகுளோனல் ஆன்டிபாடிகள் வழங்கப்பட வேண்டும். மோனோகுளோனல் ஆன்டிபாடிகளின் விநியோகம் உலகளவில் மிகவும் குறைவாகவே உள்ளது என்று டாக்டர் அரோரா கூறினார்.

**இதைத் தடுக்க முடியுமா?**

எளிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நிபாவைத் தடுக்கலாம். கீழே விழுந்த அல்லது பாதியாகச் சாப்பிடப்பட்ட பழங்களைத் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். பதப்படுத்தப்படாத பேரீச்சம்பழச் சாற்றைக் குடிக்க வேண்டாம். பழங்களை நன்கு கழுவவும். தொற்றுநோய் பரவும் காலத்தில் நோயாளிகளுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும். சுகாதாரப் பணியாளர்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களைப் (கையுறை, மாஸ்க், அங்கி) பயன்படுத்த வேண்டும் மற்றும் கடுமையான தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.


கேரளா மற்றும் மேற்கு வங்கம் நிபா வைரஸ் பரவலாகக் காணப்படும் பகுதிகளாகும். நிபா வைரஸ் ஒரு தீவிரமான மற்றும் கொடிய விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய் என்று விவரித்த டாக்டர் அரோரா, அது ஏற்படுத்தும் கடுமையான பொது சுகாதார அபாயங்களை எடுத்துரைத்தார். நிபா வைரஸ் ஒரு விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோயாகும். இந்தத் திடீர் நோய் பரவல் கேரளா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய இரு மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ளது. வங்கதேசத்திலும் நிபா வைரஸ் பரவலாகக் காணப்படுகிறது என்று அவர் கூறினார்.

இந்தத் தொற்று பரவாமல் தடுக்க அரசாங்கங்களும் சுகாதாரத் துறைகளும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மூலமாக மட்டுமே இதைக் கட்டுப்படுத்த முடியும்.

# சட்டசபை தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்ய தலைமை தேர்தல் கமிஷனர் குழு அடுத்த மாதம் வருகை!

சென்னை, ஜன. 28–

தமிழ்நாடு சட்டசபை தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது. அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை இந்திய தேர்தல் கமிஷன் மேற்கொண்டு வருகிறது. பொதுவாக சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் சூழ்நிலையில், அந்தந்த மாநிலங்களுக்குச் சென்று தலைமை தேர்தல் கமிஷனர் தலைமையிலான குழு 2 நாட்கள் தங்கி இருந்து தேர்தல் முன்னேற்பாடுகளை ஆய்வு செய்வது வழக்கம். பொதுவாக வாக்காளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டதும் இந்தக் குழு வரும் பிப்ரவரி மாதம் 17–ந் தேதியன்று தமிழகத்திற்கான இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. அதையொட்டிய தேதியில்




இந்தக் குழு சென்னைக்கு வருகை தரும்.

இந்த வருகையின்போது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகள், வருமான வரித்துறை, வங்கிகள், அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட மத்திய அரசுத் துறைகளின் அதிகாரிகளை அழைத்து தலைமை தேர்தல் கமிஷனர் ஆலோசனை நடத்துவார். அதற்கு முன்னதாக தேர்தல் கமிஷனின் துணை கமிஷனர்கள் தமிழகம் வந்து ஆய்வு மேற்கொள்வார்கள்.

சிறப்பு தீவிர திருத்தப் பணியை முன்னிட்டு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான கால அவகாசம் வரும் 30–ந் தேதியுடன் (நாளை மறுநாள்) முடிகிறது. ஏற்கனவே கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு இருப்பதால் மேலும் கால அவகாசம் அளிப்பதற்கு வாய்ப்பில்லை என்று தேர்தல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஓராண்டுக்கு H1B visa நேர்காணல்கள் இல்லை!! ஐடி ஊழியர்கள் அதிர்ச்சி!!

டெல்லி, ஜன. 28–

அண்மைக்காலமாக அமெரிக்க அரசு h1b விசா வழங்குவதில் பல்வேறு கட்டுப்பாடுகளை நடைமுறைக்கு கொண்டு வந்திருக்கிறது. ஹெச்1பி விசா மூலம் அமெரிக்காவுக்கு வருகை தருபவர்களால் அமெரிக்கர்களுக்கான வேலைவாய்ப்பு பறிபோகிறது என டிரம்ப் நிர்வாகம் கூறுகிறது. இதன் காரணமாகும் விசா நடைமுறையில் பல மாற்றங்களை அறிமுகப்படுத்தியது. குறிப்பாக கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து ஹெச்1பி விசாவுக்காக விண்ணப்பம் செய்பவர்கள் மற்றும் அவரை சார்ந்தவர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும்போது அவர்களின் சமூக வலைதள பதிவுகளையும் ஆய்வு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு இருக்கிறது. இதன் காரணமாக விசா நடைமுறைகள் பெரிய அளவில் தாமதமாகின்றன

இந்த நிலையில் இந்தியாவில் டெல்லி ,மும்பை, சென்னை, ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா ஆகிய ஐந்து நகரங்களிலும் செயல்படக்கூடிய அமெரிக்க தூதரகங்களில் ஹெச்1பி விசாவுக்கான வழக்கமான நேர்காணல் தேதிகள் தீர்ந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது புதிதாக நேர்காணல் தேதிகள் 2027 ஆம் ஆண்டில் தான் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டிருப்பதால் அனைவரும் அதிர்ச்சி அடைந்திருக்கின்றனர். டிசம்பர் 2025–ல் நேர்காணல் தேதி கொண்டிருந்த வர்களுக்கு 2026 மார்ச்சில் தேதி கிடைக்கும் என்றும் பின்னல் 2026 அக்டோபரில் தேதி கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்ட நிலையில் அந்த தேதிகள் தற்போது 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு மாற்றி மின்னஞ்சல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த துறையில் செயல்படக்கூடிய




ஏஜென்சிகள் மற்றும் நிபுணர்கள் ஹெச்1பி விசா விவகாரம் பெரிய பூதாகரமாக வெடிக்கப் போகிறது என கூறுகின்றனர்.

ஏனெனில் அமெரிக்க தூதராக இணையதளங்களில் எல்லாம் அப்பாயின்மென்ட் தேதிகள் இல்லை என்றே காட்டுகின்றன இந்தியா மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலும் விசா விண்ணப்பத்திற்கான அப்பாயிண்ட்மென்ட்கள் கிடைக்கவில்லையாம். புதிய குடியேற்ற கொள்கைகள் காரணமாக விசா வழங்கும் வழங்குவதில் தொடர்ந்து தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக அதிகாரிகள் விண்ணப்பதாரர்களின் சமூக வலைதள பக்கங்களை ஆய்வு செய்வதற்கும் அவர்களிடம் நேர்காணல் எடுத்துக் கொள்வதற்கும் அதிக நேரம் தேவைப்படுகிறது.


இது ஒரு புறம் இருக்க இந்தியர்கள், மெக்சிகோ அல்லது கனடா போன்ற நாடுகளுக்கு சென்று விசா ஸ்டாம்பிங் செய்து கொள்ளும் முறை இதற்கு முன்பு இருந்தது. ஆனால் தற்போது அந்த வசதியும் நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தியர்கள் இந்தியாவில் தான் விசா ஸ்டாம்பிங் செய்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டிருப்பதால் புதிதாக விசா வேண்டி விண்ணப்பம் செய்பவர்களுக்கும் , ஏற்கனவே விசா பெற்று ஒரு அவசர தேவைக்காக வெளிநாடு சென்றவர்களுக்கும் சிக்கல் வந்துள்ளது. இந்தியா வந்தவர்கள் மீண்டும் ஸ்டாம்பிங் செய்து அமெரிக்கா செல்வதற்கும் முடியாமல் தவிக்கின்றனர். பல மாதங்களாக அமெரிக்கா திரும்ப முடியாமல் இருந்தால் அங்கே வேலை பறிபோகும் அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே மைக்ரோசாப்ட் போன்ற நிறுவனங்கள் ஹெச்1பி விசா ஊழியர்கள் தேவையற்ற காரணம் இல்லாமல் அமெரிக்கா விட்டு வெளியேறுவதை தவிர்க்க வேண்டும் என்றும் அப்படி தாயகம் சென்றால் ஓராண்டு வரை திரும்ப வர முடியாத சூழல் ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளன.

# வ.உ.சி.யின் மெய்யறம் நூல் (தனி மனித மேம்பாட்டுக்கான நூல்) வெளியீட்டு விழா!

கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் சார்பில் டி பி கே ரோடு அதன் அலுவலகத்தில் இன்று நண்பகல் நடைபெற்ற எளிய நிகழ்வில் வ உ சி யின் இளைய மகன் வ உ சி வாலேஸ்வரன் அவர்கள் மகள் மரகத மீனாட்சி ராஜா தொகுத்துள்ள மெய்யறம் நூல் உரையுடன் கூடியது வெளியிடப்பட்டது. அதன் தலைவர் மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம் நூலினை வெளியிட்டுப் பேசுகையில் இதனைத் தொகுத்துள்ள ஆசிரியர் வ உ சியின் பேத்தி. இவர் இளைஞர்கள் முன்னேற வ உ சி காட்டும் நல்வழிகள், ஆங்கிலத்தில் கப்பலோட்டிய தமிழன் வ உ சிதம்பரம் பிள்ளை ஆகிய நூல்கள் எழுதியவர். மெய்யறம் நூலில் 500 வரிகளை பிரஞ்சில் மொழி பெயர்த்தவர். பிரஞ்சு ஆசிரியராகப் பணிபுரிந்தவர், மெய்யறம் 1250 வரிகள் மற்றும் உரை இவற்றை விக்கி மூலத்தில் பதிவேற்றியவர். இவரது கணவர் பாங்க் ஆப் பரோடா வங்கியில் முதன்மை மேலாளர் பணியாற்றியவர். பொள்ளாச்சி தொண்டாமுத்தூர் வ உ சி தில்லை வனம் பகுதியில் வசித்து வருபவர். இவரது தந்தை நமது கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் பல்வேறு கூட்டங்களில் பங்கேற்று நம்முடன் பன்னிரண்டு ஆண்டுகள் நெருங்கிய நட்பில் இருந்த மாமனிதர் வ உ சி வாலேஸ்வரன் அவர்கள். இந்த நூல் 152 பக்கம் நான்கு தலைப்பில் உள்ளது. விலை ரூ150 இது முழுவதும் மனித வாழ்வின் தனிமனித ஒழுக்கம், முன்னேற்றம், தேச பக்தி, அறிவியல் தமிழ் என நமது அன்னைத்



தமிழுக்கு சிறப்புச் சேர்த்திடும் வண்ணம் அமைந்துள்ளது என்றார். நூலின் முதல் படியை மதுரைத் திருவிளையாடல் புராணம் ஆராய்ச்சி மைய நிறுவனர், மதுரை வாழ் குமரி மாவட்ட மக்கள் நலப் பேரவை பொதுச் செயலாளர் கே.சந்திரசேகர் பெற்றுக் கொண்டார். மற்றும் சிறப்புப் படியினை தாம்பிராஸ் மாநிலத் துணைத் தலைவர் இல.அமுதன், கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற முன்னோடிகள் சீ. கிருஷ்ணமூர்த்தி, கவிஞர் மு.முருகேசன், சுற்றமும் நட்பும் இதழ் ஆசிரியர் கவிஞர் மீ.ராமசுப்பிரமணியன், எல் ஐ சி மேனாள் வளர்ச்சி அதிகாரி லெ மு மு. லெட்சுமணன், மதுரை உலா நற்பணி மன்ற நிறுவனர் மற்றும் தலைவர் ரெ.கார்த்திகேயன், சமூக வலைதள பிரச்சாரகர் கந்த விலாஸ் கே.முருகேசன் பெற்றுக் கொண்டனர். உரை ஆசிரியரின் கணவர் என்.சாத்தையா ராஜா, மற்றும் மு.இரவீஸ்வரி முருகேசன் கலந்து கொண்டனர். தமிழுக்கும் தமிழர் நலனுக்கும் வளரும் தலைமுறைக்கும் இந்நூல் மிகுந்த பயன் தரும் வகையில் வெளிவந்துள்ளது. வாழிய வ உ சி குடும்பத்தினர் வாழியவே.



# தன் மாமியாருக்கு அதிர்ஷ்டத்தை கொண்டு வரும் மருமகன்கள்... எந்த ராசி?



வேத ஜோதிட நிபுணர்களின் கூற்றுப்படி மேஷம் முதல் மீனம் வரை உள்ள 12 ராசிகளும் தனித்துவமான பண்புகள் மற்றும் குணாதிசயங்களை கொண்டுள்ளன. தங்கள் ராசி மற்றும் கிரகங்களின் நிலைக்கு ஏற்ற தனக்கான தனித்துவமான பலன்களை பெறுவதோடு, தன்னை சார்ந்து உள்ளவர்களுக்கும் தனித்துவமான பலன்களை அளிக்கின்றனர். அந்த வரிசையில், தங்கள் மாமியாருக்கு நற்பலன்களை கொண்டு வரும் அதிர்ஷ்டக்கார ராசிகள் எது? குறிப்பாக, மாமியாருக்கு நற்பலன்களை கொண்டுவரும் அதிர்ஷ்டக்கார ஆண்களின் ராசி எது? என்பது குறித்து இங்கு நாம் காணலாம்!

**கடகம்!**

கடக ராசி கொண்டவர்கள் அடிப்படையில் கருணை உள்ளம் கொண்டவர்கள். மற்றவர்கள் மீது அளவு கடந்த அன்பை வெளிப்படுத்தும் நபர்கள். தனது நலனை காட்டிலும் தன்னை சார்ந்து உள்ளவர்களின் நலனில் கூடுதல் கவனம் செலுத்த கூடியவர்கள். குடும்ப விவகாரங்களில், வீட்டில் இருக்கும் பெரியவர்களை முன்னிலைப்படுத்தும் குணத்திற்கு சொந்தக்காரர்கள்.

தன் குடும்ப நலனுக்கு முன்னுரிமை அளிக்க கூடியவர்கள், அதிர்ஷ்டத்தின் அடையாளமாகவும் இருக்கின்றனர். அந்த வகையில், தன் குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் ஒரு தேவ தூதராக இவர்கள் பார்க்கப்படுகின்றனர். தனது சொந்த குடும்பத்தினர் மற்றும் தனது வாழ்க்கை துணையின் குடும்ப உறவுகள் அனைவரின் நலனையும், தனது ராசியின் அதிகாரத்தால் உறுதி செய்கின்றனர். அந்த வகையில், கடக ராசி ஆண்களை மருமகனாக பெறும், பெண்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்பார்த்த நற்பலன்களை காண முடியும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்!

**ரிஷபம்!**

கடக ராசியினருக்கு அடுத்தபடியாக தனது மாமியாருக்கு அதிர்ஷ்டத்தால் வெற்றிகளை அள்ளிக் கொடுக்கும் ஒரு ராசியாக ரிஷப ராசி பார்க்கப்படுகிறது. ரிஷப ராசி கொண்டவர்கள், சுக்கிரனை ஆளும் கிரகமாக கொண்டுள்ளனர். அழகு, ஆடம்பரம், செல்வம், கலை, செழுமையை பிரதிபலிக்கும் சுக்கிரனை ஆளும் கிரகமாக கொண்ட ரிஷப ராசியினர் மற்றவர்கள் மீது அளவு கடந்த அன்பு செலுத்தக்கூடியவர்கள்.

அதேநேரம் மற்றவர்களுக்கு நம்பகமான நண்பர்கள் – உறவினர்களாகவும் இருக்கின்றனர். அந்த வகையில் தனது மாமியார் உள்ளிட்ட குடும்ப உறவுகளுக்கு பக்க துணையாகவும், படை தளபதியாகவும் இவர்கள் இருப்பார்கள். சுக்கிரனின் நேரடி பார்வையால் பலன்கள் பல காணும் ரிஷப ராசியினர், தங்கள் ராசியின் பலனை தனது உறவினர்களுடனும் பகிர்ந்துக் கொள்கின்றனர்.

**துலாம்!**

துணிச்சலான முடிவுகளை எடுக்கும் துலாம் ராசியினர் தங்களின் ராஜதந்திரங்கள் மற்றும் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளுக்கு பெயர் பெற்றவர்கள். வெற்றியின் அடையாளமாக இருக்கும் இவர்கள், செல்லும் இடத்தில் வெற்றிகளை குவிக்கும் தன்மை கொண்டவர்கள். தனது தனிப்பட்ட வாழ்க்கையில் எதிர்பார்த்த வெற்றிகளை காண்பதோடு, தன்னை சார்ந்து உள்ளவர்களின் வெற்றிகளையும் உறுதி செய்கின்றனர்.

பெரும்பாலும் நிதானமாக செயல்பட்டு, இலக்கை அடையும் குணம் கொண்ட இவர்கள், திருமண வாழ்க்கையில் சிறப்பான திருப்பங்களைகொண்டு வருகின்றனர். தனது வாழ்க்கை துணையின் வெற்றிக்கு பின் ஊக்க சக்தியாக இருக்கும் அதேநேரம், தனது மாமியாரின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கும் உதவி செய்கின்றனர்.

தனது வெற்றிகள் மூலம் மற்றவர்களின் வெற்றிகளை உறுதி செய்யும் துலாம் ராசியினர், உண்மையில் தங்கள் குடும்ப உறவுகளுக்கு கிடைத்த அதிர்ஷ்ட அறிகுறி என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்!

**மகரம்!**

மகர ராசியினர் தங்களின் பொறுப்புணர்வுக்கு பெயர் பெற்றவர்கள். கையில் எடுக்கும் பணியை வெற்றிகரமாக செய்து முடிக்க தேவையான முயற்சிகளை அளிக்க கூடியவர்கள். கடுமையான உழைப்பாளிகள், விடா முயற்சிக்கும் பெயர் பெற்றவர்கள். தங்கள் கடமையுணர்வின் காரணமாக தான் எடுக்கும் பணிகளில் வெற்றி காண்பதோடு, தன்னை சார்ந்து உள்ளவர்களின் வெற்றிக்கும் உதவி செய்கின்றனர்.

கர்ம வினைகளின் அடிப்படையில் தனித்துவமான பலன்களை அளிக்கும் சனி கிரகத்தை ஆளும் அதிபதியாக கொண்ட மகர ராசியினர், சனி கிரகத்தின் ராஜதந்திரங்களை கொண்டவர்கள். தங்கள் ராஜதந்திரங்களை வேண்டும் இடத்தில் எப்படி பயன்படுத்த வேண்டும்? என்பதை தெளிவாக அறிந்தவர்கள். சனி கிரகம் பெரும்பாலும் எதிர்மறை ஆற்றலின் அறிகுறியாக பார்க்கப்படுகிறது.

ஆனால், வேத ஜோதிட நிபுணர்கள் கூற்றுப்படி சனி கிரகமானது உங்கள் கர்ம வினைகளுக்கு ஏற்ப நற்பலன் மற்றும் கெடுபலன் என இரண்டையும் நிகராக அளிக்கிறது. சனியின் தாக்கத்தை தன்னுள் கொண்டிருக்கும் மகர ராசி ஆண்களும், தங்கள் மாமியாரின் வாழ்க்கையில் அத்தகைய கலவையான பலன்களை கொண்டு வருகின்றனர்!

**பொதுவான பண்புகள்!**

குறிப்பிடப்பட்ட இந்த நான்கு ராசிகளும் (கடகம், ரிஷபம், துலாம் மற்றும் மகரம்) ஒரு பொதுவான புள்ளியில் இணைகின்றன. ஆம், தன் மாமியாரின் நலன் காக்கும் அந்த ஒரு விஷயத்தில் இந்த 4 ராசிக்காரர்களும் ஒன்றாக இணைகின்றனர்.

குறித்த இந்த 4 ராசியினரும், நிலைத்தன்மை கொண்டவர்கள் – நிலையான வெற்றியை தேடி செல்பவர்கள்.

நல்லிணக்கத்தை காக்க முயற்சிப்பவர்கள்; பெரியவர்களுக்கு மதிப்பு அளிப்பவர்கள். அந்த வரிசையில் வயதில் மூத்த தனது மாமியாருக்கு மதிப்பும், மரியாதையும் அளிப்பதோடு – அவரின் நற்பெயரை காக்கும் விஷயங்களிலும் கவனம் செலுத்துகின்றனர். மேலும், தங்கள் குடும்ப உறவுகளின் நலன் காக்கும் விஷயங்களில் கவனம் செலுத்துவதோடு, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய ஏதுவாக – உணர்வுப்பூர்வமான ஆதரவையும் அளிக்கின்றனர்!

# புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க விழா!

ஒட்டன்சத்திரம், ஜன. 28–

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல் நாள் துவக்க விழாவை ஊரக உள்ளாட்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குத்துவிளக்கேற்றி வைத்து துவக்கி வைத்து விழா பேருரையாற்றினார். இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ச.ரா.ஜெயப்பிரதா வரவேற்று பேசினார். இவ்விழாவில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். விழாவில் கல்லூரி வளாகத்தில் ஊரக உள்ளாட்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். சச்சிதானந்தம் ஆகியோர்




மரக்கன்றுகளை நட்டு புதிய கல்லூரியின் முதல் நாள் துவக்க விழாவை சிறப்பாக தொடங்கி வைத்தனர்.

இவ்விழாவில் திண்டுக்கல் மேற்கு வட்டம் வட்டாட்சியர் சுல்தான் சிக்கந்தர், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன் மலரவன், ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிதியாளர் இ.ஆர். பி.சுகன்யா, கிராம நிர்வாக அலுவலர் கௌதம் ராஜ், திண்டுக்கல் திமுக கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சிவகுருசாமி, ஒன்றிய செயலாளர்கள் மணி, இன்பராஜ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் மலைச்சாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரமேஸ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சுப்புலட்சுமி சண்முகவேல், கொத்தப்புள்ளி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரி அன்பரசு, துணைத்தலைவர் ரங்கசாமி, ஊராட்சி செயலர் செந்தில்குமார் உள்ளிட்ட கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

முடிவில் ரெட்டியார்சத்திரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வணிக வியல் துறைத்தலைவர் முனைவர் மு.சரவணன் நன்றி கூறினார்.




## நீங்கள் 100 வயது வரை வாழ விரும்புகிறீர்களா?




ஆரோக்கியமான மற்றும் நீண்ட ஆயுளைப் பற்றி அனைவரும் கனவு காண்கிறார்கள். இதற்குப் பெரிய மாற்றங்கள் தேவையில்லை; சிறிய தினசரி பழக்கவழக்கங்களே ஆரோக்கியத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக காலை உணவு மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சிகளின்படி, காலையில் சரியான சத்தான உணவுகளை உண்பது உடலுக்குத் தேவையான ஆற்றலை வழங்குவதோடு மட்டுமல்லாமல், இதயம், மூளை மற்றும் செரிமான மண்டலத்தின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது.

காலை உணவின் முக்கியத்துவம் என்ன? இரவு தூக்கத்திற்குப் பிறகு, உடல் பல மணி நேரம் உணவு இல்லாமல் இருக்கிறது. இந்த நேரத்தில் காலை உணவு உண்பது உடலின் செயல்பாடுகளுக்கு ஆற்றல் அளிப்பதற்கான முதல் படியாகும். சமச்சீரான காலை உணவை உண்பது இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுகிறது மற்றும் நாள் முழுவதும் சுறுசுறுப்பாக வேலை செய்ய உதவுகிறது.

ஓட்ஸ் கஞ்சியின் நன்மைகள்: ஓட்ஸ் கஞ்சி நார்ச்சத்து நிறைந்த உணவாகும், குறிப்பாக கரையக்கூடிய நார்ச்சத்து, இது கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்க உதவுகிறது. ஓட்ஸை தொடர்ந்து உட்கொள்வது இதயம் தொடர்பான பிரச்சனைகளின் அபாயத்தைக் குறைக்கிறது. இது வயிறு நிறைந்த உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தேவையற்ற நொறுக்குத் தீனிகளைத் தவிர்ப்பதற்கும் உதவுகிறது.

உலர் பழங்களின் ஊட்டச்சத்து சக்தி: பாதாம் மற்றும் அக்ரூட் பருப்புகள் உட்பட உலர் பழங்களில் ஆரோக்கியமான கொழுப்புகள் நிறைந்துள்ளன. அவற்றில் உள்ள ஒமேகா–3 கொழுப்பு அமிலங்கள் மூளையின் செயல்பாட்டை மேம்படுத்துகின்றன மற்றும் இதய ஆரோக்கியத்தைப் பராமரிக்கின்றன. காலையில் ஒரு சிறிய அளவு உலர் பழங்களை சாப்பிடுவது நினைவாற்றல் மற்றும் கவனத்தை மேம்படுத்தும்.

சியா விதைகள்: சியா விதைகளில் புரதம், நார்ச்சத்து மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. அவை செரிமானத்தை மேம்படுத்தவும் உடலில் ஏற்படும் அழற்சியைக் குறைக்கவும் உதவுகின்றன. காலையில் தண்ணீர் அல்லது பாலில் ஊறவைத்த சியா விதைகளை உட்கொள்வது ஒரு ஆரோக்கியமான பழக்கமாகும்.

முட்டைகள்: முட்டைகள் உயர்தர புரதத்தின் மூலமாகும், மேலும் அவை தசைகளை வலுப்படுத்த உதவுகின்றன. காலை உணவில் முட்டைகளைச் சேர்ப்பது உடலுக்குத் தேவையான ஆற்றலை வழங்குகிறது மற்றும் நாள் முழுவதும் சோர்வைக் குறைக்கிறது. இது எடை கட்டுப்பாட்டிற்கும் உதவுகிறது.

பழங்கள்: காலையில் வெறும் வயிற்றில் பப்பாளி மற்றும் வாழைப்பழம் போன்ற புதிய பழங்களை சாப்பிடுவது செரிமானத்திற்கு நல்லது. பழங்களில் உள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கின்றன.

தவிர்க்க வேண்டிய உணவுகள்: காலையில் அதிகப்படியான சர்க்கரை மற்றும் எண்ணெய் நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டாம் என்று வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர். இவை உடலில் சோர்வு மற்றும் மந்தநிலையை அதிகரிக்கக்கூடும். ஆரோக்கியமான காலை உணவே நீண்ட கால ஆரோக்கியத்திற்கான திறவுகோலாகும்.

# அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடை விதிகளில் மாற்றம்: வழிகாட்டுதல்களை வெளியிட்ட மத்திய அரசு!

புதுடெல்லி ஜன. 28–

ஊழியர்களுக்கு மாத சம்பளம் மிக முக்கியமானது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அதே அளவிற்கு, பணி ஓய்வுக்கு பிறகு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடையும் முக்கிய அம்சங்களாக பார்க்கப்படுகின்றன. மத்திய அரசு மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் (CPSEs) ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்குவது தொடர்பான ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. இதில் பணிக்கொடைக்கான தகுதி, காலக்கெடு மற்றும் ரூ.20 லட்சம் பணிக்கொடை உச்சவரம்பின் பொருந்தக்கூடிய தன்மை ஆகியவை குறித்த முக்கிய விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**நிதி அமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனங்கள் துறை வெளியிட்ட குறிப்பாணை**

நிதி அமைச்சகத்தின் பொதுத்துறை நிறுவனங்கள் துறை (DPE) இந்த வழிகாட்டுதல்களை டிசம்பர் 9, 2025 தேதியிட்ட அலுவலக குறிப்பாணை வழியாக வெளியிட்டது. இந்த வழிகாட்டுதல்கள், 1972 ஆம் ஆண்டு பணிக்கொடைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களைத் தொடர்ந்து, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட முந்தைய அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கங்களை ஒருங்கிணைக்கின்றன.

**Gratuity payment: பணிக்கொடை செலுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்**

முன்பு மத்திய பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு பணிக்கொடை வழங்குவது குறித்து பல வழிகாட்டுதல்களையும் விளக்கங்களையும் வெளியிட்டதாகவும், இப்போது குழப்பங்களைத் தவிர்ப்பதற்கும், அனைத்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களிலும் சீரான அமலாக்கத்தை உறுதி செய்வதற்கும் அவற்றை "பின்வரும் பத்திகளில்" ஒருங்கிணைத்துள்ளதாகவும் அந்த அலுவலக குறிப்பாணையில், பொதுத்துறை நிறுவனங்கள் துறை (DPE) கூறியுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் அனைத்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொருந்தும். இது நிர்வாக மற்றும் நிர்வாகம் அல்லாத ஊழியர்கள் (executives and non–executive) இருவரையும் உள்ளடக்கியது.

Gratuity Ceiling: சட்டத்தின் கீழ் பணிக்கொடை உச்சவரம்பில் மாற்றம்

– இந்த விளக்கம், 2018 ஆம் ஆண்டு பணிக்கொடை (திருத்தச்) சட்டத்தின்




மூலம் 1972 ஆம் ஆண்டு பணிக்கொடைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களைத் தொடர்ந்து வந்துள்ளது.

– திருத்தத்தின்படி, சட்டத்தின் பிரிவு 4(3) திருத்தப்பட்டு, ₹10 லட்சம் என்ற நிலையான பணிக்கொடை உச்சவரம்பிற்குப் பதிலாக, "மத்திய அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படக்கூடிய தொகை" என மாற்றப்பட்டது.

– அதன்பிறகு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், திருத்தப்பட்ட விதிகள் மார்ச் 29, 2018 முதல் நடைமுறைக்கு வந்ததாக அறிவித்தது.

– மேலும், "சட்டத்தின் கீழ் ஒரு ஊழியருக்குச் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகை இருபது லட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும்" என்றும் அது குறிப்பிட்டது.

– ஜனவரி 1, 2017 மற்றும் மார்ச் 28, 2018 வரையிலான காலத்திற்கான பணிக்கொடை செலுத்துதல் என்பது தனிப்பட்ட மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலையைச் சார்ந்தது என்று பொதுத்துறை நிறுவனங்கள் துறை தெளிவுபடுத்தியது.

"03.08.2017 தேதியிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் துறையின் வழிகாட்டுதல்களின் கீழ் பணிக்கொடை செலுத்துவது, சம்பந்தப்பட்ட மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் நிதித் திறனுக்கு உட்பட்டது," என்று அந்த குறிப்பாணை கூறுகிறது. இது, ஜனவரி 1, 2017 முதல் ஊதியம் திருத்தப்பட்ட, IDA ஊதிய முறையின் கீழ் உள்ள நிர்வாகிகளுக்கும், தொழிற்சங்கத்தில் சேராத மேற்பார்வையாளர்களுக்கும் பொருந்தும். எளிமையாகச் சொன்னால், இந்தக் காலத்திற்கான கிராஜுவிட்டித் தொகையை, நிதிச் சுமையை ஏற்கும் திறனின் அடிப்படையில் தீர்மானிக்க மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மார்ச் 29, 2018–க்குப் பிறகு கட்டாயமாக ரூ.20 லட்சம் பணிக்கொடை

– மார்ச் 29, 2018 அன்று அல்லது அதற்குப் பிறகு செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைக்கு, வழிகாட்டுதல்கள் தெளிவாகவும் கட்டாயமாகவும் உள்ளன.

– "29.03.2018 அன்று மற்றும் அதற்குப் பிறகு, அனைத்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்கும் (CPSEs) அவற்றின் நிதிநிலைமையைப் பொருட்படுத்தாமல், ₹20 லட்சம் பணிக்கொடை வழங்குவது கட்டாயமாகும்," என்று அந்த அலுவலகக் குறிப்பு கூறுகிறது.

– இந்த விதிமுறை அனைத்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும். ஏனெனில் இது 1972 ஆம் ஆண்டு பணிக்கொடைச் சட்டத்தில் செய்யப்பட்ட சட்டப்பூர்வ திருத்தத்திலிருந்து நேரடியாகப் பெறப்பட்டது.

7வது ஊதியக் குழுவின் பலன் மத்திய பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்குப் (CPSE) பொருந்தாது

மத்திய பொதுத்துறை நிறுவன ஊழியர்களிடையே அடிக்கடி குழப்பத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கிய விஷயத்தையும் பொதுத்துறை நிறுவனங்கள் துறை (DPE) தெளிவுபடுத்தியுள்ளது.

7வது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஜனவரி 1, 2016 முதல் பணிக்கொடை உச்சவரம்பை ₹10 லட்சத்திலிருந்து ₹20 லட்சமாக உயர்த்திய அரசாங்கத்தின் முடிவு, "மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்குப் பொருந்தாது". இதன் பொருள், 7வது ஊதியக் குழுவின் கீழ் வரும் மத்திய அரசு ஊழியர்களைப் (Central Government Employees) போலன்றி, மத்திய பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் ஜனவரி 1, 2016 முதல் இந்த உயர்த்தப்பட்ட உச்சவரம்பைக் கோர முடியாது.

**அமைச்சகங்கள் மற்றும் மத்திய பொதுத்துறை நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்**


ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்குவதை உறுதி செய்யுமாறு அனைத்து நிர்வாக அமைச்சகங்களையும் துறைகளையும் பொதுத்துறை நிறுவனங்கள் துறை (DPE) கேட்டுக்கொண்டுள்ளது.

"அனைத்து நிர்வாக அமைச்சகங்கள்/துறைகளும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், இந்த அலுவலகக் குறிப்பின் உள்ளடக்கங்களை தங்களின் நிர்வாக வரம்பிற்குட்பட்ட மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன," என்று குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்.ஐ. தேர்வுக்கான முடிவுகள் வெளியீடு..!! உடல் தகுதித் தேர்வு எப்போது..?

சென்னை, ஜன. 28–

தமிழக காவல்துறையில் சப்–இன்ஸ்பெக்டர் (SI) ஆக வேண்டும் என்ற கனவோடு காத்திருந்த இளைஞர்களுக்கு ஒரு முக்கிய செய்தி வெளியாகியுள்ளது. கடந்த டிசம்பர் 21–ஆம் தேதி மாநிலம் முழுவதும் உள்ள 46 மையங்களில் நடைபெற்ற 1,299 எஸ்.ஐ பணியிடங்களுக்கான எழுத்துத் தேர்வு முடிவுகளை தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் (TNUSRB) தற்போது அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. சுமார் 1.78 லட்சம் பேர் பங்கேற்ற இந்தப் போட்டித் தேர்வின் முடிவுகள், வாரியத்தின் அதிகாரப்பூர்வ







இணையதளமான www.tnusrb.tn.gov.in இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

எழுத்துத் தேர்வில் தகுதி பெற்றவர்களில் இருந்து, ஒரு காலிப்பணியிடத்திற்கு 5 பேர் என்ற விகிதாசார அடிப்படையில் மொத்தம் 7,414 விண்ணப்பதாரர்கள் அடுத்தகட்டமான உடல் தகுதித் தேர்வுக்கு (Physical Test) அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உடல் தகுதித் தேர்வுகள் வரும் பிப்ரவரி 24–ஆம் தேதி தொடங்கி மார்ச் 2–ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. இந்த தேர்வில் வெற்றி பெறுபவர்கள் மட்டுமே இறுதிச் சுற்றான நேர்முகத் தேர்வுக்கு (Vi–va – Voce) அனுமதிக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்வு முடிவுகளை இணையதளத்தில் சரிபார்த்துக் கொண்ட விண்ணப்பதாரர்கள், அடுத்த சில வாரங்களில் நடைபெற உள்ள உடல் தகுதித் தேர்விற்காக தங்களைத் தீவிரமாக தயார்படுத்தி வருகின்றனர். எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் தங்களின் அழைப்புக் கடிதங்களை (Hall Ticket) வாரியத்தின் இணையதளம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிப்ரவரியில் வங்கிகளுக்கு எத்தனை நாட்கள் விடுமுறை.?




சென்னை, ஜன. 28–

2026–ஆம் ஆண்டின் இரண்டாவது மாதமான பிப்ரவரியில், வங்கிப் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ள வாடிக்கையாளர்கள் கவனிக்க வேண்டிய விடுமுறை பட்டியலை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தற்போது வெளியிட்டுள்ளது.

வார விடுமுறை மற்றும் குறிப்பிட்ட மாநில பண்டிகைகளை உள்ளடக்கி, இம்மாதத்தில் மொத்தம் 5 நாட்கள் மட்டுமே வங்கிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கியின் அறிவிப்பு தெரிவிக்கிறது.

விடுமுறை நாட்களின் விவரங்களை பார்த்தால், பிப்ரவரி 1, 15 மற்றும் 22 ஆகிய தேதிகள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் நாடு முழுவதும் உள்ள அனைத்து வங்கிகளுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது. அதேபோல், வங்கி விதிமுறைகளின்படி பிப்ரவரி 14–ஆம் தேதி இரண்டாவது சனிக்கிழமையாகவும், பிப்ரவரி 28–ஆம் தேதி நான்காவது சனிக்கிழமையாகவும் வருவதால், அன்றைய தினங்களிலும் வங்கிகள் இயங்காது. குறிப்பாக, பிப்ரவரி 15–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையுடன் 'மகா சிவராத்திரி' பண்டிகையும் இணைந்து வருவதால், தமிழ்நாடு உட்பட ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற பல்வேறு மாநிலங்களில் அன்றைய தினம் பொது விடுமுறை அமலில் இருக்கும்.

# தேர்வு கிடையாது.. 12ஆம் வகுப்பு, டிப்ளமோ முடித்திருந்தால் போதும்..!! இந்தியன் ஆயில் நிறுவனத்தில் கொட்டிக் கிடக்கும் வேலை..!!

நாட்டின் முன்னணி பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (IOCL), தற்போது நாடு முழுவதும் காலியாக உள்ள 394 அப்ரண்டிஸ் (Apprentices) பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது. தகுதியும், ஆர்வமும் உள்ள இளைஞர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி இந்தியன் ஆயில் நிறுவனத்தில் தங்களது தொழில்முறை பயணத்தை தொடங்கலாம். இந்த வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ அல்லது சம்பந்தப்பட்ட துறைகளில் டிப்ளமோ (Diploma), பட்டப்படிப்பு (Degree) முடித்தவராகவோ இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்களின் வயது வரம்பு 18 முதல் 24 வயதிற்குள் இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அரசு விதிகளின்படி ஓபிசி (OBC) பிரிவினருக்கு 3 ஆண்டுகளும், எஸ்சி/எஸ்டி (SC/ST) பிரிவினருக்கு 5 ஆண்டுகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு (PwBD) 10 முதல் 15 ஆண்டுகள் வரையிலும் வயது தளர்வு வழங்கப்படுகிறது.




விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வு அல்லது நேர்காணல் இன்றி, அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் (Merit List) நேரடியாக தேர்வு செய்யப்படுவார்கள் என்பது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். முதற்கட்டமாக மதிப்பெண் அடிப்படையில் பட்டியலிடப்படும் நபர்கள், பின்னர் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு (Certificate Verification) அழைக்கப்படுவார்கள். இதற்கு விண்ணப்பக் கட்டணம் எதுவும் கிடையாது என்பதால் தகுதியுள்ள அனைவரும் தயக்கமின்றி விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் முறையை பொறுத்தவரை, டிரேட் அப்ரண்டிஸ் (Trade Apprentice) பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் apprenticeshipindia.gov.in என்ற இணையதளத்திலும், டெக்னீசியன் அப்ரண்டிஸ் மற்றும் இதரப் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் nats.education.gov.in என்ற இணையதளத்திலும் பதிவு செய்ய வேண்டும். விண்ணப்பிக்க தொடங்கும் தேதி 28.01.2026 ஆகும்.

இதற்கான கடைசி தேதி 10.02.2026 என அறிவிக்கப்பட்டுள்ளதால், காலதாமதத்தை தவிர்க்க இப்போதே தயாராகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## வருமானவரி,மும்பை விளையாட்டு வீரர்களுக்கான வேலைவாய்ப்பு!

Organization Name: Income Tax Mumbai
Notification No: Pr.CCIT/Mum/Personnel/Sports Recruitment/2025–26
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 97 Sports Person Posts
Place of Posting: Mumbai
Starting Date: 07.01.2026
Last Date: 31.01.2026
Apply Mode: Online
Official Website: https://www.incometaxmumbai.gov.in/

## மத்திய தோல் ஆராய்ச்சி மேம்பட்டவர் துறை, சென்னை – 13 காலியிடங்கள்

Organization Name: CSIR CLRI, Central Leather Research Institute
Notification No: 01/2026
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 13 MTS, JSA, Junior Stenographer Posts
Place of Posting: Chennai
Starting Date: 23.01.2026
Last Date: 02.03.2026
Apply Mode: Online
Official Website: https://clri.org/

## சலீம் அலி பறவியல் மற்றும் இயற்கை வரலாறு மையம் – 36 பணியிடங்கள்

Organization Name: Salim Ali Centre for Ornithology and Natural History
Notification No: SACON/RES/RCTMT/ADVT–01/2026
Job Category: Central Govt Jobs
Employment Type: Contract Basis
Total No of Vacancies: 36 Office Assistant/ MTS, Computer Assistant, Finance Assistant, Administrative Assistant, Senior Project Manager, Project Assistant, Project Associate & Project Scientist Posts
Place of Posting: Coimbatore
Starting Date: 22.01.2026
Last Date: 08.02.2026
Apply Mode: Online
Official Website: https://www.sacon.in/


## அ/மி தியாகராஜர சுவாமி திருக்கோயில் சென்னை; 10 காலியிடங்கள்

Organization Name: Arulmigu Thyagaraja Swamy Temple, Tiruvottiyur, Chennai
Job Category: Tamilnadu Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 10 Junior Assistant, Collection Clerk, Office Assistant, Watchman (Kavalar), Veda Parayanam, Assistant Cook (Swayambagam) Posts
Place of Posting: Tiruvottiyur, Chennai
Starting Date: 31.12.2025
Last Date: 30.01.2026 at 05.45 PM
Apply Mode: Offline
Official Website: https://thiruvottiyurvadivudaiamman.hrce.tn.gov.in/

## தேசிய உலோகவியல் ஆய்வகத்தில் 27 காலியிடங்கள்

Organization Name: CSIR–NML, National Metallurgical Laboratory
Notification No: 10/2025
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 22 Multi Tasking Staff (MTS) Posts
Place of Posting: Jamshedpur, Chennai and Digha
Starting Date: 05.01.2026
Last Date: 06.02.2026
Apply Mode: Online
Official Website: https://nml.res.in/

# புதிய உச்சத்தில் தங்கம்,வெள்ளி விலை...!



சென்னை, ஜன. 28–

சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,960 அதிகரித்து, ஒரு சவரன் ரூ.1,22,640–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.370 அதிகரித்து, ஒரு கிராம் ரூ.15,330–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சர்வதேச சந்தையில் நிலவும் அசாதாரணமான சூழலால், தொடர்ந்து தங்கம் விலையில் ஏற்றம், இறக்கம் இருக்கும் என்றே சொல்லப்படுகிறது.

வெள்ளி விலை தொடர்ச்சியாக இன்றும் உச்சம் அடைந்துள்ளது. வெள்ளி விலையை பொறுத்தவரையில், கிலோவுக்கு ரூ.13,000 உயர்ந்து, ஒரு கிலோ ரூ.4,00,000–க்கும், கிராமுக்கு ரூ.13 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.400–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.




# ஜம்மு காஷ்மீரின் சோனாமார்க் சுற்றுலாத் தலத்தில் பனிச்சரிவு!

ஜம்மு, ஜன. 28–

ஜம்மு காஷ்மீரில் கடும் பனிப்பொழிவு நிலவு வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.





இந்நிலையில், ஜம்மு காஷ்மீரின் சோனாமார்க் சுற்றுலாத் தலத்தில் நேற்றிரவு திடீரென பனிச்சரிவு ஏற்பட்டது. கட்டடங்களை பனிச்சரிவு மூடிச்செல்லும் சிசிடிவி காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் நல்வாய்ப்பாக உயிர்சேதம் எதுவும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வங்கிகளில் கடன் வாங்கியவர்களுக்கு ஜாக்பாட்!! பட்ஜெட் முடிந்த உடன் RBI வெளியிட இருக்கும் குட் நியூஸ்!

டெல்லி, ஜன. 28–

வங்கிகளில் வீட்டுக்கடன் மற்றும் வாகன கடன் வாங்கியவர்களுக்கு 2025 ஆம் ஆண்டு மிகச்சிறந்த ஒரு ஆண்டாக அமைந்திருந்தது. கடந்த ஆண்டில் மட்டும் இந்திய ரிசர்வ் வங்கி 1.25% வரை ரெப்போ வட்டி விகிதத்தை குறைத்தது. இதனை அடுத்து வங்கிகளும் தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய வாகன கடன், வீட்டுக் கடன் மற்றும் தங்க நகை கடன்களுக்கான வட்டியை குறைத்தன. ரிசர்வ் வங்கியின் வட்டி குறைப்பு நடவடிக்கையின் மூலம் மிடில் கிளாஸ் மக்களுக்கு தங்களுடைய கடன்களுக்கான ஒட்டுமொத்த இஎம்ஐ தொகை யில் பல லட்சங்களை சேமிக்க முடிந்தது.




இந்த நிலையில் ரிசர்வ் வங்கியின் நிதி கொள்கை குழு கூட்டம் பிப்ரவரியில் நடைபெற இருக்கிறது. பிப்ரவரி 1ஆம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் நிலையில் 4ஆம் தேதி நிதி கொள்கை குழு கூட்டம் தொடங்குகிறது.

மும்பையில் நடைபெறும் நிதி கொள்கை குழு கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் பிப்ரவரி 6ஆம் தேதி ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ராவால் செய்தியாளர்களிடம் தெரிவிக்கப்படும். கடந்த ஆண்டில் 4 முறை வட்டி குறைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிப்ரவரியில் 0.25%, ஏப்ரலில் 0.50%, ஜூனில் 0.50%, டிசம்பரில் 0.25% என மொத்தமாக ரெப்போ வட்டி விகிதம் கடந்த பிப்ரவரியில் 6.50% ஆக இருந்து டிசம்பரில் 5.25%என குறைக்கப்பட்டது. வரக்கூடிய நிதி கொள்கை குழு கூட்டத்திலும் ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்படும் என பேங்க் ஆஃப் அமெரிக்கா கணிப்பு வெளியிட்டுள்ளது. பணவீக்கம் கட்டுக்குள் இருப்பது, அமெரிக்க மத்திய வங்கி வட்டி குறைப்பு அறிவிப்பை வெளியிட இருப்பது ஆகியவை மேலும் ஒரு வட்டி குறைப்பு சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளன என பேங்க் ஆஃப் அமெரிக்கா அறிக்கை குறிப்பிடுகிறது. 0.25% வரை ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்படலாம் என தெரிவித்துள்ளது. அப்படி குறைந்தால் ரெப்போ வட்டி விகிதம் 5.00%என மாறும். இது நேரடியாக நம்முடைய வங்கி கடன் வட்டி விகிதங்களை குறைக்கும். எனவே நாம் செலுத்தும் மாதாந்திர இஎம்ஐ தொகை குறையும். வீட்டு கடன் வாங்கியவர்களில் ஃபுளோட்டிங் வட்டி விகிதத்தை தேர்வு செய்தவர்களுக்கு ஒட்டுமொத்தமாக பல லட்சங்கள் சேமிப்பை ஏற்படுத்தி தரும். ரெப்போ வட்டி விகிதம் என்பது ரிசர்வ் வங்கி மற்ற வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம். எனவே இந்த வட்டி விகிதம் குறையும் போது வங்கிகள் தானாகவே வாடிக்கையாளர்களுக்கு வழங்கக்கூடிய பல்வேறு கடன்களுக்கான வட்டியை குறைக்கின்றன. எனவே புது ஆண்டில் வட்டி குறைப்பு இருக்குமா என லட்சக்க ணக்கான வங்கி வாடிக்கை யாளர்கள் ஆவலுடன் எதி ர்பார்த்து காத்திருக்கின்றனர்.

# தேமுதிகவை இழுக்கும் பணியில் திருமா; அதிமுகவை அலெர்ட் செய்த பாஜ மேலிடம்!

சென்னை, ஜன. 28–

தமிழகத்தில் , தேசிய ஜனநாயக கூட்டணியை பலப்படுத்தும் முயற்சியில் அதிமுக – பாஜ ஈடுபட்டுள்ளன . இதற்கான ஆலோசனைகளை அதிமுக பொதுச்செயலர் பழனிசாமிக்கு பாஜ தெரிவித்து வருகிறது . தேமுதிக தலைமையுடன் பழனிசாமி ஏற்கனவே பேச்சு நடத்தினார். தேமுதிக தரப்பில் வைக்கப்பட்ட இரட்டை இலக்க தொகுதிகள் , ராஜ்யசபா எம்பி ஆகிய கோரிக்கைகளை அதிமுக ஏற்றாலும் , ' மத்திய அமைச்சர் பதவி' கோரிக்கையை பாஜ பக்கம் திருப்பிவிட்டது . எனவே , தேமுதிக தலைமையை தொடர்பு கொண்டு மத்திய அமைச்சர் பியுஷ் கோயல் பேசினார் . அப்போது , விஜயபிரபாகரனுக்கு மத்திய அமைச்சர் பதவி தருமாறு கேட்டுள்ளனர் . ' உங்களின் கோரிக்கை தேர்தலுக்கு பின் நிறைவேற்றப்படும்' என , பியுஷ் கோயல் உறுதி அளித்தும் தேமுதிக ஏற்கவில்லை . இதனால் , மதுராந்தகத்தில் கடந்த இருபத்து மூன்றாம் தேதி நடந்த பிரதமர் மோடி கூட்டத்தில் தேமுதிக பங்கேற்கவில்லை . இதற்கிடையே , பாமக மற்றும் அமமுக உள்ளிட்ட கட்சிகள் சேர்ந்ததால் , தேஜ கூட்டணி பலமானதைத் தொடர்ந்து , தே .மு . தி . க , வை தங்கள் கூட்டணியில்



சேர்க்க தி . மு . க , மேலிடம் தீவிரம் காட்டியது

அமைச்சர் வேலு வாயிலாக நேரடியாக பேச்சு நடத்திய நிலையில் , தற்போது கூட்டணி கட்சிகளை தி . மு . க , களம் இறக்கி உள்ளது . அதன்படி , விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் , தே . மு . தி . க . , தலைமைக்கு நெருக்கமான வர்களிடம் , சென்னை அசோக்நகரில் கடந்த இருபத்து நான்காம் தேதி இரவு , கூட்டணி தொடர்பாக நீண்ட நேரம் பேச்சு நடத்தி உள்ளார். அப்போது , ' தனக்கு பாதிப்பு வந்துவிடக்கூடாது என்பதற்காக , பா . ஜ , கூட்டணியில் பழனிசாமி உள்ளார் . அது அவருக்கு எதிராக முடியும் . அந்த தவறை தே . மு . தி . க , செய்யக்கூடாது . தி . மு . க , கூட்ட ணியில் சேர்ந்தால் , தொகுதி குறைவாக இருந்தாலும் நிச்சயம் அனைத்திலும் வெற்றி கிடைக்கும்' என தெரிவித்துள்ளார் இதை யடுத்து , பொதுச்செயலர் பிரேமலதாவிடம் தெரிவித்து பதில் அளிப்பதாக , தே . மு . தி . க , நிர்வாகிகள் கூறியுள்ளனர் . இந்த தகவல்களை மத்திய உளவுப்பிரிவு போலீசார் வாயிலாக தெரிந்து கொண்ட பா . ஜ , மேலிடம் , அ . தி . மு . க , தலைமையிடம் தெரிவித்து உஷார்படுத்தியுள்ளது

அதைத் தொடர்ந்து , அ . தி . மு . க , தலைமையும் , தே . மு . தி . க , தலைமைக்கு நெருக்கமானவர்களிடம் பேசி , கூட்டணியில் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது . இது குறித்து , பா . ஜ , நிர்வாகிகள் கூறுகையில் , ' கூட்டணிக்கு தே . மு . தி . க , வை கொண்டு வர , பல வழிகளிலும் முயற்சி நடக்கிறது . விரைவில் முடிவு தெரியும்' என்றனர் .

# தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை: ராகுல் காந்தியை சந்திக்கிறார் கனிமொழி!

சென்னை, ஜன. 28–

தமிழகத்தில் கடந்த 2021–ம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில், அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் (25 தொகுதிகளில் போட்டியிட்டது), விடுதலை சிறுத்தைகள் கட்சி (6), ம.தி.மு.க. (6), இந்திய கம்யூனிஸ்டு கட்சி (6), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி (6), கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி (3), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (3), மனிதநேய மக்கள் கட்சி (2), தமிழக வாழ்வுரிமைக்கட்சி (1) உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தன.

கூட்டணிக்கு தலைமை வகித்த தி.மு.க. 177 தொகுதிகளில் போட்டியிட்டது. அதில், ம.தி.மு.க., கொ.ம.க., ம.ம.க., தமிழக வாழ்வுரிமை கட்சி போன்றவை உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டதும் அடங்கும்.



இறுதி வடிவம் பெற்ற கூட்டணி கடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற கட்சிகள் இந்த முறையும் இடம் பெற்றுள்ளது. கூடுதலாக, நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதிமய்யமும் கைகோர்த்துள்ளது.

இந்த சூழலில், தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் எல்லாம், இந்த முறை கூடுதல் தொகுதிகளை கேட்டுப்பெறுவோம் என்று கூறிவருகின்றன. ஆனால், வெளிப்படையாக இன்னும் தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தை தொடங்கப்பட வில்லை. இந்நிலையில் டெல்லி செல்லும் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி, காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியை சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இரு கட்சிகள் இடையே தொகுதிப் பங்கீடு பேச்சு விரைவில் தொடங்க உள்ள நிலையில் இந்த சந்திப்பு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# 4 முனைப்போட்டி மும்முனையானால்.. விஜய் போடும் புது தேர்தல் கணக்கு..!

சென்னை, ஜன. 28–

தமிழகத்தில் அடுத்த 2 மாதத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆளுங்கட்சியான தி.மு.க. தலைமையில் ஒரு அணி, எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தலைமையில் மற்றொரு அணி, தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி தனித்து போட்டி என்ற நிலை நீடிக்கிறது.



தி.மு.க. தனது கூட்டணியை கடந்த சட்டசபை தேர்தலில் (2021) இருந்ததுபோல வலுவாக வைத்துள்ளது. தற்போது, கூடுதலாக நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யமும் இணைந்துள்ளது. அ.தி.மு.க.வை பொறுத்தவரை மத்தியில் ஆளுங்கட்சியான பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளது. இந்தக் கூட்டணியில், பா.ம.க. (அன்புமணி அணி), த.மா.கா., அ.ம.மு.க., புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சி, பெருந்தலைவர் மக்கள் கட்சி உள்ளிட்டவை இணைந்துள்ளன. தே.மு.தி.க., புதிய தமிழகம் கட்சியை இணைப்பதற்கான பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.

**தி.மு.க. கூட்டணியில் ராமதாஸ் இல்லை**

தி.மு.க. கூட்டணியில் இணைந்தால், பா.ம.க.வுக்கு (ராமதாஸ் அணி) 4 தொகுதிகளும், தே.மு.தி.க.வுக்கு 6 தொகுதிகளும், ஒரு ராஜ்யசபா சீட்டும் தருவதாக ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டதாக சொல்லப்பட்டது. ஆனால், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், நேற்று தி.மு.க. அரசை கண்டித்து அறிக்கை வெளியிட்டதன் மூலம் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு அவர் செல்லவில்லை என்பது உறுதியாகியுள்ளது. தே.மு.தி.க. இன்னும் கூட்டணி முடிவை எடுக்காத நிலையில், பா.ஜ.க. தரப்பில் தொடர்ந்து பேசப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

**தலைக்கு மேல் 'கத்தி'**

இந்த நிலையில், "ஆட்சியில் பங்கு தருவோம்" என்ற வாக்குறுதியுடன் கூட்டணி கதவை திறந்து வைத்திருந்த தமிழக வெற்றிக் கழகத்தில் இதுவரை யாரும் இணையவில்லை. இதனால், "வீட்டுக்கு ஒரு ஓட்டு" என்று மாற்றி யோசித்த த.வெ.க. தலைமை, 40 சதவீத வாக்குகள் வரை கிடைக்கும் என எதிர்பார்க்கிறது.

இந்தக் கணக்கையே கட்சியின் தலைவர் விஜய்யிடமும் நிர்வாகிகள் கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே, கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் பலியானது தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை, சென்சார் சான்றிதழ் பிரச்சினையால் கடைசி படமான 'ஜனநாயகன்' வெளியாவதில் சிக்கல் என தலைக்கு மேல் 'கத்தி' தொங்கிக் கொண்டு இருப்பதால், தேர்தலில் தோற்றால் கடும் பின்விளைவுகளை சந்திக்க வேண்டியது இருக்கும் என விஜய்க்கு நெருக்கமானவர்கள் அவரிடம் கூறிவருகின்றனர்.

**விஜய் புதிய முடிவு**

இதனால், நடிகர் விஜய் புதிய முடிவை எடுத்திருப்பதாக கூறப்படுகிறது. தமிழக அரசியலை பொறுத்தவரை தற்போதைய நிலையில் மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக குரல் கொடுத்து வருபவர்கள் விஜய், சீமான் ஆகிய 2 பேர்தான். ஆனால், சீமான் தனித்து போட்டி என்றே கூறிவருகிறார். கூட்டணி குறித்து பத்திரிகையாளர்கள் அவரிடம் கேள்விகேட்டபோதுகூட, தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துக்கு ஏற்பட்ட நிலையை சுட்டிக்காட்டி, தான் தனித்துதான் போட்டி என்பதை உறுதிப்படுத்திவந்தார். இந்த நிலையில்தான், த.வெ.க. தலைவர் விஜய், தனது நெருங்கிய திரைத்துறை நண்பர் ஒருவர் மூலம் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானிடம் கூட்டணிக்கு அழைப்பு விடுத்ததாக கூறப்படுகிறது.

**யோசிக்கும் சீமான்**

"நாம் இருவரும் தனித்தனியாக நின்றால், கணிசமான வாக்குகளைத்தான் பெற முடியும். தேர்தலில் வெற்றி வாகை சூட வேண்டும் என்றால், இருவரும் இணைந்த கைகளானால் மட்டுமே அது சாத்தியம்" என்றும் கூறியதாக தெரிகிறது. ஆனால், உடனே பதில் எதுவும் சொல்லாத சீமான், யோசிக்கத் தொடங்கி இருப்பதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், தேர்தலில் சீமானை தனித்து களம்காணச் சொல்லியே ஆளுங்கட்சி தரப்பில் இருந்தும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாம். தமிழக சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அது மும்முனை போட்டியாக குறைந்தால், அதாவது விஜய் – சீமான் கைகோர்த்தால், அவர்களுக்கு வெற்றி வாய்ப்பு இருக்கிறது என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.


**அரசியல் நகர்வு**

மேலும், த.வெ.க. கூட்டணியில், பா.ம.க. (டாக்டர் ராமதாஸ் அணி), ஓ.பன்னீர்செல்வம், தே.மு.தி.க. ஆகியவற்றை இணைக்கவும் தூதுவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. "தேர்தல் சமயத்தில் அரசியலில் எதுவும் நடக்கலாம்" என்ற வகையில், தமிழக அரசியல் நகர்வுகள் தற்போது பரபரப்பாக இருந்து கொண்டிருக்கிறது.

# யாரும் என்னை அழைக்கவில்லை அதிமுக ஒன்றிணைவது ஆண்டவன் கையில்... ஓபிஎஸ் விரக்தி!

அவனியாபுரம், ஜன. 28–

அதிமுக ஒன்றிணைவது ஆண்டவன் கையில் இருக்கிறது, கூட்டணிக்கு யாரும் என்னை அழைக்கவில்லை என ஓபிஎஸ் விரக்தியாக கூறியுள்ளார். முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று மதுரை வந்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், "என்னுடைய ஒற்றை கோரிக்கை வேண்டுகோள் என்பது பிரிந்திருக்கும் அதிமுகவின்



அனைத்து சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என்பது தான். வேறு எந்த கோரிக்கையும் கிடையாது" என்றார்.

அப்போது செய்தியாளர்கள், "அதிமுக மீண்டும் ஒன்றிணைய வாய்ப்புள்ளதா" என்றனர். அதற்கு ஓபிஎஸ், "அது ஆண்டவன் கையில் தான் உள்ளது. மீண்டும் நான் அதிமுகவில் இணைய வாய்ப்புள்ளதா என்கிறீர்கள். உங்கள் ஆசீர்வாதத்துடன் நடக்கும். கூட்டணி குறித்து டிடிவி.தினகரன் உள்பட யாரும் என்னை அழைத்து பேசவில்லை" என்றார். பின்னர் அங்கிருந்து காரில் பெரியகுளம் புறப்பட்டு சென்றார்.

## சினிமா துளிகள்..!

### மின்னி மறையுதா ஜனநாயகன் அரசியல் சீன்கள்? கண்ணை உறுத்தும் "சிம்பிள்" காட்சிகள்.. விஜய்க்கு 3 ஆப்ஷன்!



விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' படம், கடுமையான இடியாப்ப சட்ட சிக்கல்களை எதிர்கொண்டு வருகிறது.. சென்சார் வாரியம், திரைப்படத்தில் சில காட்சிகள் சமூகத்தில் பிரச்சனை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகக் கண்டுபிடித்து, சென்சார் சான்றிதழ் வழங்க மறுத்துள்ளது.. நேற்றைய தினம் மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், படக்குழு அடுத்து என்ன செய்ய போகிறது? என்ன முடிவெடுக்க போகிறது? என்பதும் மிகப்பெரிய ஆர்வத்தை கிளப்பி விட்டுள்ளது..!! ஜனநாயகன் விவகாரம் போகிற போக்கை பார்த்தால், ஒரு சினிமா வெளியீடு தொடர்பான மோதலாக தெரியவில்லை; அது சென்சார் போர்டின் அதிகாரத்துக்கும், ஒரு படைப்பாளியின் சுதந்திரத்துக்கும் இடையேயான யுத்தமாகவே மாறியிருப்பது போல உள்ளது..

ஜனநாயகன் படம் பொங்கல் பண்டிகைக்கு எப்படியாவது ரிலீஸ் செய்துவிட வேண்டும் என்ற இலக்குடன் துவங்கப்பட்ட இந்த படம், இப்போது கோர்ட்டிலேயே தேங்கி நிற்கிறது... தனி நீதிபதியின் உத்தரவை டிவிஷன் பெஞ்ச் ரத்து செய்திருப்பது, படக்குழுவுக்குக் கிடைத்துள்ள பின்னடைவு என்பதையும் தாண்டி, சட்ட ரீதியான ஒரு நீண்ட போராட்டத்திற்கு தயாரிப்பாளர்களை தள்ளியுள்ளது என்றே சொல்லலாம்.. சமூகப் பிரச்சனை என்ற வாதத்தை சென்சார் வாரியம் முன்வைக்கிறது.. படத்தின் சில சீன்கள் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வாரியம் சொல்வது, படத்தின் அரசியல் வீரியத்தை மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறது... சென்சார் போர்டு கறார் தணிக்கை வாரியத்திற்கு உரிய அவகாசம் வழங்கப்படவில்லை என்ற நீதிமன்றத்தின் கருத்து, இனிவரும் நாட்களில் இந்த வழக்கை மேலும் நீட்டிக்கவே செய்யும். வழக்கறிஞர் சதீஷ் பராசரனுடன் தயாரிப்பு நிறுவனம் நடத்தி வரும் அவசர ஆலோசனை, படத்தின் வணிக நலன் மற்றும் அரசியல் சூழல் ஆகிய இரண்டையும் மையப்படுத்தியே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. Recommended For You "ஓபிஎஸ் முன் இருக்கும் 2 வாய்ப்புகள்.. பாஜக கொடுக்கும் ஐடியா.. விஜய்யுடன் நடக்கும் சந்திப்பு?" ஆனால் படக்குழுவின் முன்னால் இருக்கும் சவால்கள் மிகவும் சிக்கலானதாகவே உள்ளது.. ஒன்று சுப்ரீம் கோர்ட்டில் அப்பீலுக்கு போவது, மற்றொன்று மறுஆய்வுக்கு செல்வது, இன்னொன்று தனி நீதிபதியிடம் மீண்டும் அணுகி வழக்கை விசாரிக்க கோரி மனு தாக்கல் செய்வது என்ற ஆப்ஷன்கள் உள்ளன.. சட்டப்போராட்டத்தை சுப்ரீம் உச்ச நீதிமன்றம் வரை கொண்டு சென்றால், அது நீதிக்கான வெற்றியாக அமையலாம், ஆனால் படத்தின் ரிலீஸ் தேதி மாதக்கணக்கில் தள்ளிப்போகக்கூடும் என்று படக்குழு யோசிக்கிறது..

**விஜய்க்கு 3 ஆப்ஷன்கள்:**

சென்சார் போர்டு பரிந்துரைப்படி மறு ஆய்வுக்கு செல்வது எனபது, படைப்பின் ஆன்மாவாகக் கருதப்படும் சில காட்சிகளை தியாகம் செய்வதற்கு சமம்... இதில் எதை தேர்ந்தெடுப்பது என்ற தர்ம சங்கடத்தில் படக்குழு தவிப்பதாக தெரிகிறது..

இவை அனைத்தையும் விட, மிகப்பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்து நிற்பது வரவிருக்கும் சட்ட மன்ற தேர்தல்தான்.. ஒரு அரசியல் பின்னணி கொண்ட படம், தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாகவே தியேட்டருக்கு வராவிட்டால், அதன் பிறகு தேர்தல் ஆணையத்தின் கடும் நிபந்தனைகளையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும்... அதாவது தேர்தல் அறிவிப்புக்கு முன் படம் வெளியிட முடியாவிட்டால், தேர்தல் ஆணையத்தின் அனுமதி வரும் வரைபடம் திரையரங்குகளை நோக்கி செல்ல முடியாது. அது இந்த படத்தின் வசூலையும், படக்கருத்துக்களின் தாக்கத்தையும் பெருமளவு பாதிக்கவே செய்யும்.. எனவே படக் குழு என்ன முடிவெடுக்க போகிறது? என்று தெரியவில்லை.. பொறுத்திருந்து பார்ப்போம்...!!



விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட வலையங்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பாக வைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:

செல் : 7904806432

போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020